**செய்தி வெளியீடு எண்: 692** **நாள்:21.11.2012**

## பத்திரிகைச் செய்தி

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு சி.த.செல்லப் பாண்டியன் அவர்கள் தொழிற்சங்க பிரதிநிதிகள் தங்குவதற்கேற்ப ரூ.30 லட்சம் செலவில் மேம்படுத்தப்பட்ட ஜீவா இல்லத்தினை 21.11.2012 அன்று காலை 11.00 மணிக்கு திறந்து வைத்தார்.

தமிழகத்தின் பல்வேறு இடங்களிலிருந்து இணைக்கப் பேச்சுவார்த்தைக்காக சென்னைக்கு வரும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குறைந்த வாடகையில் தங்குவதற்காக ஜீவா இல்லம் கட்டப்பட்டுள்ளது. இங்கு ஒரே நேரத்தில் 62 பேர் தங்க படுக்கை வசதி செய்யப்பட்டுள்ளது. கடந்த 2011–2012ம் ஆண்டில் ஜீவா இல்லத்தில் மொத்தம் 3722 தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்கிப் பயனடைந்துள்ளனர்.

தொழிலாளர் துறையில் பணிபுரிந்து இறந்த 9 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

நீண்ட நாட்களாக தீர்வு காணப்படாத காப்பீட்டு கேட்பு மனுக்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அரசு பொறுப்பேற்ற பின்பு தற்போது தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியங்களில் 395 கேட்பு மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு ஒவ்வொருவருக்கும் தலா ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) வழங்கப்படவுள்ளது. இதனடிப்படையில் இன்றைய தினம் முதல் கட்டமாக மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் 27 பயனாளிகளுக்கு ரூ.27,45,000/– (ரூபாய் இருபத்தேழு லட்சத்து நாற்பத்தைந்தாயிரம் மட்டும்) வழங்கப்பட்டது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அம்மா அவர்கள் ஆட்சியில்தான் கடந்த அரசைவிட அதிகமான அளவு தொழிலாளர்களுக்கு நிதியுதவியினை வழங்கி வருகின்றோம். தொழிலாளர் நலத் துறை சிறப்புடன் செயலாற்றி வருகின்றது என்றார்.

பின்னர் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 74–வது கூட்டம் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மற்றும் வாரியத் தலைவர் திரு சி.த.செல்லப் பாண்டியன் அவர்கள் தலைமையில் சென்னை, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியக் கருத்தரங்குக் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தொழிலாளர் நல நிதி செலுத்தும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையை உயர்த்தியும், தொழிலாளர்கள் பணிக்காலத்தில் இறந்து விட்டால் அவர்களின் குடும்பத்திற்கு இறப்புகால உதவித்தொகையாக ரூ.25,000/– வழங்கவும் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் வாரியத்தின் 2010–11 மற்றும் 2011–2012ம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள், 2012–2013ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு மற்றும் 2013–14ம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு ஆகியவற்றை ஏற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் அரசு தலைமைக் கொறடா டாக்டர் வைகை செல்வன், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு மோகன் பியாரே இ.ஆ.ப., தொழிலாளர் ஆணையர் டாக்டர் பி.சந்திரமோகன், இ.ஆ.ப., நிதித்துறை இணைச் செயலாளர் திரு பி.ரவிநாராயணன், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் திருகே.அய்யனு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு ரா.சின்னசாமி, திரு எஸ்.எஸ்.இரமணிதரன், திரு எஸ்.காமராஜ், நிர்வாகத் தரப்பு பிரதிநிதிகள் திரு.டி.எம்.ஜவஹர்லால், திரு வி.ரெகுராஜன், திரு ஸ்ரீநாகேஸ்வர், திரு வி.ராஜப்பன், திரு பா.ராம்குமார், தொழிலாளர்கள் தரப்பு பிரதிநிதிகள் திரு டி.எம்.மூர்த்தி, திரு கே.ஏ.மனோகரன், திரு வி.குமார், திரு எம்.சௌந்திரபாண்டியன், நியமன உறுப்பினர்கள் திருமதி பாத்திமா வசந்த் மற்றும் திருமதி சுசீலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக தொழிலாளர் ஆணையர் டாக்டர் பி.சந்திரமோகன், இ.ஆ.ப. அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த உறுப்பினர்களை வரவேற்றுப் பேசினார். கூட்டத்திற்கான பொருட்கள் மீது விவாதம் நடைபெற்றது. இறுதியாக மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி கூறினார். இத்துடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

செயலாளர்,
தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்,

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**